செ.வெ.எண்: 45 நாள்: 21.09.2016

## பத்திரிகைச்செய்தி

## வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.8.2016 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் வேளாண்மையை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ் பல்வேறு வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் வாங்க நடப்பாண்டில் ரூபாய் 31 கோடியே 6 லட்சம் மானியம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். இத்திட்டம், வேளாண் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ் நெல்நாற்று நடவு செய்யும் இயந்திரம், பவர்டில்லர், சுழற்கலப்பை, குழி தோண்டும் கருவி, விசை களையெடுக்கும் இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், தட்டை வெட்டும் கருவி, விசைத் தெளிப்பான்கள், மனித தோழமைக் கருவிகளான தென்னை மரம் ஏறும் கருவி, நேரடி நெல் விதைப்புக் கருவி போன்ற கருவிகளும் மற்றும் டிராக்டர் மற்றும் பவர்டில்லர் ஆகியவற்றால் இயக்கப்படும் இதர வேளாண்மைக் கருவிகளும், இயந்திரங்களும் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தில் சிறு, குறு, ஆதி திராவிட பழங்குடி மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் வரையும் இதர விவசாயிகளுக்கு 40 சதவிகிதம் வரையும் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வேளாண் பொறியியல் துறையால் ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்ட உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து தங்களின் முழு விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்து மானிய உதவியுடன் வாங்கி பயனடையலாம்.

இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அல்லது சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) அலுவலகத்திலிருந்து விண்ணப்பங்களை பெற்று, பூர்த்தி செய்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்விபரங்கள், வேளாண் பொறியியல் துறையின் முன்னுரிமைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு மூதுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும். வேளாண்மைப் பொறியியல் துறையின் அனுமதிக்கடிதம் கிடைக்கப் பெற்றவுடன் தேர்வு செய்த கருவிகள்/வேளாண் இயந்திரம் ஆகியவற்றிற்குரிய முழுத்தொகையையும், விவசாயிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கேட்பு வரைவோலை மூலமாக வழங்க வேண்டும். வேளாண் இயந்திரங்கள்/கருவிகளை விவசாயிகள் பெற்ற பின்னர், அதனை வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள் உறுதி செய்து, அதற்குரிய முழு மானியத் தொகையும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்துவார்கள்.

விவசாயிகள் வேளாண் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க, இத்திட்டத்திற்கென புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.1.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

1. பாஸ்போர்ட் அளவு புகைப்படம் - 2 எண்கள்
2. ஆதார் அட்டையின் நகல்
3. சிட்டா அடங்கல் நகல்
4. புல வரைபட நகல்
5. சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று
6. ஜாதிச்சான்றின் நகல்
7. டிராக்டரில் இயங்கக்கூடிய கருவிகளான இருப்பின் டிராக்டரின் பதிவுச்சான்றின் நகல்

விவசாயிகள் அணுக வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்:

விராலிமலை, அன்னவாசல், குன்றாண்டார்கோவில், புதுக்கோட்டை, கறம்பக்குடி, கந்தர்வக்கோட்டை, திருவரங்குளம், வட்டார விவசாயிகள் அணுக வேண்டிய முகவரி உதவிசெயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, கதவு எண்: 1426 C,பண்டகசாலை வளாகம், திருச்சி ரோடு, திருக்கோகர்ணம் அஞ்சல், புதுக்கோட்டை. அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, அரிமளம், திருமயம், பொன்னமராவதி வட்டார விவசாயிகள் அணுக வேண்டிய முகவரி உதவிசெயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, கதவு எண்: 122, ரங்கோஜி பாவா தெரு, அறந்தாங்கி . மேலும் விபரங்களுக்கு செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, எண்: 81, காட்டுப்புதுக்குளம் ரோடு, வேளாண்மை இணை இயக்குநர் வளாகம் 2 வது மாடி, புதுக்கோட்டை . தொலைபேசி : 04322 -221816.எனவே, மானியவிலையில் கருவிகள்/இயந்திரங்கள் பெற விரும்பும் விவசாயிகள் உடனடியாக வேளாண் பொறியியல் துறையில் பதிவு செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**